# தென் இந்தியாவில் முருகன் இயக்கம்

இந்தியாவின் பாரம்பரிய நற்பண்புகள், வால்யூம்-4, கொல்கத்தா, இராமகிருஷ்ண நிறுவனம், 1956 - பக்கம் 309-313

{ Skanda Cult in South India- From The Cultural Heritage of India, Vol. IV (Calcutta: Ramakrishna Mission, 1956) pp. 309-313. By K.R. Venkataraman, B.A., L.T., Puravrttajyoti ) }

ஆங்கிலத்தில் மூலக் கட்டுரை :- கே.ஆர். வெங்கடராமன், B.A/ L.T , புரவ்ட்டைஜோதி

தமிழில் மொழி பெயர்ப்பு :- சாந்திப்பிரியா ( nrj_1945@yahoo.com)

## முருகனும் ஸ்கந்தனும்

தென் இந்தியாவில் முருகன் வழிபாடு என்பது மிகப் பழைமயானது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை சைவ மற்றும் எந்த முறையான பக்தி மார்கமாக இருந்தாலும், முருக வழிபாட்டை உள்ளடக்கிக் கொண்டிருக்காமல் அவை இருக்க முடியாது. ஏன் எனில் தமிழ் நாட்டைப் பொறுத்தவரை மற்ற எந்த கடவுளுக்கும் இல்லாத அளவு பக்தர்கள் முருகனுக்கு உள்ளனர்.

தென் இந்தியாவில் உள்ள பழங்குடி மலை வாழ் இனத்தினரான நாகா என்பவர்கள் ( பாம்பை வணங்கும் மலைக்குடி மக்கள் ) ஒரு பாம்பு முருகனைக் குறிக்கும்படியாக உள்ளது என்று நினைப்பதால், கிராமப் புறங்களில் உள்ள முருக பக்தர்களுடன் தங்களையும் இணைத்துக் கொண்டு விட்டனர். முருகனுக்கு இருந்த மிகப் பழங்காலத்திய பெயர் சீயோன் என்பது ( சிவப்பு நிறக் கடவுள் ) . முருகனைக் குறித்து இயற்றப்பட்ட பழங்குடிப் பாடல்களில் அவரை மலைக் குடி மக்களின் கடவள் , மற்றும் வேடர்களின் கடவுளாகவும் கருதி வேலன் என்றே அழைத்து வந்தனர். அவர் பெண்களின் மனதில் தீராத காதலை உருவாக்குபவர் என்று நினைத்ததினால் அவர் அருளைப் பெற மந்திர சக்திகளை பயன் படுத்தினர். அதற்காக அவருடைய ஆண் பண்டிதர்களும், பெண் பண்டிதைகளும் தேன் சொட்டும் வெங்கை *(pterocarpus marsupium)* என்ற பூமாலையை அணிந்து கொண்டு, பாடல்களை இசைத்தபடி வெறியாட்டம் அல்லது குராவை **(kuravai)** என்ற நாட்டியம் ஆடுவது உண்டு. கிராமப் புறங்களில் அவருக்கு நதிக் கரைகளிலும், மலை சரிவுகளிலும் ஆலயங்கள் உண்டு. காவிரிக் கரைப் பகுதியில் இருக்கும் காவேரிப் பட்டினத்தில் முருகன் திருவிழாக்களில் பெண்கள் தாரை, தம்பட்டைகளுடன் கூடிய இசை வாத்தியங்களுக்கு ஏற்ப நடனமாடும் பல நிகழ்சிகள் நடப்பது உண்டு.

இவற்றுடன் அந்த பக்தி இயக்கத்தை பற்றி கூறியதை முடிந்து விடவில்லை. சங்ககாலத்தைச் சேர்ந்த நூல்களில் அவரை ஒரு மயில் கொடி எந்தி, சேவல் அல்லது யானை மீது ஏறி பவனி வரும் அபாயகரமான என்ற வெற்றி வீரன் என்கின்றனர். அவர் தேவலோகப் படைத் தலைவர். திருமுறுகாற்றுப்படையில் அவரை இமயமலை மன்னான ஹிமாவத்தின் மகளுக்குப் பிறந்தவர், அக்னி மூலம் இமய மலையின் அடிவாரத்தில் இருந்த

பூமியில் பிறந்து ஆறு கிருத்திகை நட்சத்திரங்களினால் வளர்க்கப்பட்டவர் என்றெல்லாம் விவரித்து உள்ளது வரை அவருக்கு ஆரியர்களுடன் இருந்த தொடர்ப்பு முடிவடைகின்றது .

மலைப் பகுதிகளில் இருந்த குருவா இனப் பெண்கள் சேவல் கொடிக்கு கடுகு மற்றும் நெய் கலந்த கலவையைத் தடவிய பின் , அலரிச் செடியின் பூக்களையும் பச்சை இலைகளையும் கொண்டு பின்னிய மாலையை கடவுளுக்கு அணிவித்தப் பின், ஊதுபத்திகள் ஏற்றி, ஆட்டு இரத்தம் கலந்து பிசைந்த அரிசி சாத உருண்டைகளை நேவித்தியமாகப் படைத்து ஆடல் பாடல்களில் ஈடுபடுவர் என்று திருமுறுகாற்றுப் படை என்ற நூலை இயற்றிய நக்கீரர் எழுதி உள்ளார். அந்த நூலின் மற்றும் ஒரு இடத்தில் தர்ம நெறிமுறைகளை அனுசரித்தபடி, ஆறு விதக் கடமைகளையும் செய்த வண்ணம் ஹோம குண்டத்தின் முன் அமர்ந்தபடி இருந்து அந்த அந்தணர்கள் மந்திர உச்சாடனங்கள் செய்தும் மலர்களைத் துவியும் ஸ்கந்தனை வழி பட்டனர். அந்தப் பாடல்களை இயற்றிய பொழுது அவர் இருதயத்தில் ஸ்கந்தன் அல்லது குஹா என்பவரே இருந்து இருக்க வேண்டும். அவருடைய ஆறுமுகங்களைப் பற்றி இப்படியாக விவரிக்கின்றார். “ ஒரு முகம் உலகத்தின் அஞ்ஞாமை என்ற இருளை அகற்றி வெளிச்சம் தருகின்றது. இரண்டாவது பக்தர்களின் வேண்டுகோளை நிறைவேற்றுகின்றது, மூன்றாவது யாகங்களைப் பாதுகாககினறது. நானகாவது நமமுள உள்ள ஆத்மனை நாமே அறிந்து கொள்ள வைக்கின்றது. ஐந்தாவது முகம் தீய சக்திகளை அழிக்க, ஆறாவது மலைப் பெண்ணான தன் மனைவி வள்ளிய நோக்கியபடி உள்ளது “. முருகனின் முக்கியமான ஆலயங்கள் என்று திருச்செந்துார், பழனி எனும் திருவிவானக்குடி, திருப்பரம்குன்றம், ஸ்வாமிமலை எனும் திருவீரகம், மற்றும் அளகர் கோவில் என்ற பழமுதிர்ச் சோலை போன்றவற்றை நக்கீரர் சுட்டிக் காட்டினாலும், மற்ற இடங்களில் உள்ள அனைத்து மலை உச்சிகளில் உள்ள ஆலயங்களும் முக்கியமானவைகளே என்கின்றார். ஆர்யர்களுக்கு முன் இருந்த வேத்தா மற்றும் குருவாவைப் போலவே முருகனும் மிவும் அழகானவராக இருந்து இருக்கின்றார். திருமுறுகாற்றுப்படையிலும் அதற்கு முன்னர் இயற்றப்பட்ட பிற பாடல்களிலும் அசுரர்களை ஆழித்தவர் முருகன் என்ற புகழாரம் அவருக்குச் சூட்டப்பட்டது. தமிழ் பிரபந்தங்களிலும், காளிதாஸன் இயற்றிய குமார சம்பவத்திலும் அசுரர்களை அழித்து தேவர்களை சிறைகளில் இருந்து மீட்கவே முருகன் அவதரித்தார் எனக் மறைமுகமாகக் கூறப்பட்டுள்ளது. அவித்யா என்ற அறியாமையை குறித்த -மோகம், குரோதம் மற்றும் அகங்காரத்தை- உள்ளடக்கிப் பிறந்த மூன்று அசுரர்களான சூரபத்மன், சிம்மமுகன் மற்றும் தாரகா போன்றவர்களின் அறியாமையை



**திருப்பரங்குன்றத்தில் திருமுறுகாற்றுப்படையைப் பாடிய நக்கீரரையும் அவருடன் சிறையில் இருந்த 999 பேர்களையும் முருகக் கடவுள் விடுவித்தக் காட்சி**

அழித்து அவர்களை வெளிச்சத்தில் கொண்டு வரும் வகையில், அவர்களின் அறியாமை என்ற அவித்தியாவை தன் வேலால் அழித்தார்.

## ஸ்கந்த சுப்பிரமண்யன்- சிவன்

ஏழாம் நூற்றாண்டு முதல் தொடர்ந்து கண்டு பிடிக்கப் படும் பல சிலைகளின் மூலம் முருக பக்தி தமிழ் நாட்டில் எந்த அளவு பரவி இருந்தது எனப் புரியும். சோழ காலத்தைச் சேர்ந்த பல சிவன் ஆலயங்களில் ஏழு முதல் முப்பத்தி ஐந்து விதமான சிறு சன்னதிகள் இருந்தன. இருந்த அந்த சன்னதிகளில் ஒவ் ஒன்றிலும் நிச்சயமாக ஒரு சுப்பிரமண்யஸவாமி சன்னதி இருந்தது. 871-907 ஆம் ஆண்டுகளில் ஆதித்திய சோழனுடன் சம்மந்தப் பட்டிருந்த இராஜகேசரி என்ற மன்னன் ஆட்சியில் ஸவயம்பிரதானா என்ற பாலசுப்பிரமண்ய ஸ்வாமி ஆலயம் கண்ணனூரில் கட்டடப்பட்டது. அந்த கர்ராலி ( **karrali**) அல்லது ஆலயம் அடி முதல் மேல் பகுதி வரை கற்களால் கட்டப் பட்டிருந்தது. கருவறைக்கு மேல் நான்கு மூலைகளிலும் உள்ள துாணின் மீது யானைச் சிலைகள் உள்ளன. ஸ்கந்தனின் இந்த ஆலயம் அதற்குப் பின் கட்டடப்பட்ட மற்றும் பிற பல ஆலயங்களிலும் கற்பக் கிரகங்களில் உள்ள சுவறுகளில் பதிக்கப் பட்டுள்ள சிலைகள் சிவன் ஆலயங்களில் உள்ளவற்றைப் போன்றே அமைந்துள்ளன.

அந்த ஆலயத்தின் தென் பகுதியில் உள்ள சுவற்றில் உள்ளது தக்ஷிணா மூர்த்தி சிலை. கண்ணனூரில் சிதைந்த நிலையில் உள்ள பாலசுப்பிரமண்ய ஸ்வாமியின் ஒரு கை சின்ன முத்திரையைக் காட்டியபடியும், மற்றும் ஒன்று ஜெபமாலையை ஏந்தியும், முன்றாவது ஒரு சக்தி வேலைத் தன் கையில் வைத்தபடியும் காட்சி தருகின்றது. திருவேங்கைவாசல் என்ற பதினொன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த ஆலயத்தில் உள்ள சுப்ரமணியர் சிலை அபூர்வமானது. அதில் அவர் வீராசனா (**veerasana**) என்ற தோற்றம் தந்தபடி ஜெபமாலை ஒன்றையும் சக்தி வேலையும் தாங்கியபடிக் காட்சி தருகின்றார். அதைத் தவிற தன் கைகளில் ஜெபமாலை ஒன்றையும் அமுதக் கலசத்தை வைத்தபடியும் உள்ள அவரது சிலைகளும் கிடைத்து உள்ளன. ஜெபமாலை, அமுதக் கலசம், முத்திரைச் சின்னம் ஆகியவை தக்ஷிணா மூர்த்தி என்ற - ஞானகுரு- வடிவத்தில் உள்ள சிவனைக் குறிக்கின்றன. அது மட்டும் அல்ல ஞான சக்திகளான சாரதா தேவி, திருபுரசுந்தரி போன்றவர்களையும் அது குறிக்கின்றது. சுப்பிரமண்யனே கூட ஞான பண்டிதரும் குருவும் ஆனவர்.

ஆறாம் நூற்றாண்டில் மலை வாழ் மக்கள் கொண்டிருந்த வழிபாட்டு முறைறகளில் இருந்தும் வேத்தா, குறவர்களின் வழிமுறைகளில் இருந்தும் மாறுபட்டுசைவ அகமங்களின் பாதையில் பக்தி இயக்கம் செல்லத் துவங்கியது. குமார தந்திராவை சிவ தந்திராவின் கிளையாகவே கருதப்பட்டும் மகாயோகின் என முருகனைக் குறிப்பிட்டதின் மூலம் அவருக்கும் பூதங்களின் தலைவர், ஆசிரியர்,துயர் தீர்ப்பவர் போன்ற சிவபெருமானின் அனைத்து குணங்களும் இருந்தனவாம். உமையுடன் சிவன் இருந்து கொண்டு இருந்தாலும் அனைத்துத் துறவியின் தன்மைகளையும் கொண்டவர் அவர். அது போலத்தான் தேவசேனா-வள்ளியின் கணவரான சுப்பிரமண்யரும் பெரும் துறவிதான். ஐம் பூதங்களும் சிவ

கணங்களே. பிரகாசமாக வெளித் தெறித்த அவை, ஆகாயம், பூமி, கூாயு, தண்ணீர் மற்றும் நிலம் அனைத்தும் ஸ்கந்த உருவம் பெற்றன.

## ஸ்கந்தனின் உருவங்கள்

ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டுகளில் இருந்த பல்லவ வம்ச காலத்தின் சோமஸ்கந்தா சிற்பங்களின் மூலமே சிவ பார்வதியுடன் சேர்ந்து இருந்த முருகன் சிலைகள் பற்றி முதலில் நமக்குத் தெரிய வந்தது. சோமஸ்கந்தனின் பித்தளை உலோகச் சிலைகள் சோழர்களின் கலை வண்ணத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு. சிவனுக்கும் பார்வதிக்கும் இடையில் அவர் உள்ளது போன்ற சிலைகள் உள்ளன. வட இந்தியாவில் குப்த-பால காலத்திய ஹரா-பார்வதி சிலைகளைப் போலவே இருந்த பல்லவர்-சோழர் கால சிலைகளான உமா-மஹேஸ்வரரின் உலோகச் சிலைகளை விட சோமஸ்கந்தாவின் சிற்பங்கள் அற்புதமானவை. சிவபெருமான் வாழ்கையையும், பார்வதி விவேகத்தையும் முருகன் பேரானந்தத்தையும் குறிக்கின்றனர். அந்த மூவரும் இணைந்து இருப்பதே பரப்பிரும்மன் என்ற வாழ்க்கை-விவேகம்-பேரானந்தம ஆகும்.

ஸ்கந்தன் என்ற ஆறு எழுத்துக்களில் முதல் இரண்டு எழுத்த்துக்கள் சக்தி ரூபத்தையும், அடுத்த இரண்டு குமாரரையும், கடைசி இரண்டு எழுத்துக்கள் சிவ ரூபங்களையும் குறிக்கின்றன. ஆனந்த வடிவமானவரே மேன்மையானவர். தொடரும் வாழ்க்கையும் விவேகமுமே ஆனந்தம். ஷன்முகன் என்ற ரூபத்தில் அவர் சிவன்-பார்வதி இருவரையும் அடக்கி இருக்கின்றார். அவருக்கு உள்ள ஆறு முகங்களில் ஐந்து முகங்களில சிவபெருமானையும், ஒன்றில் பார்வதியையும் , பன்னிரண்டு கைகளில் பதினொன்று கைகளில் உள்ள முத்திரை மற்றும் ஆயுதங்களை ருத்திரனாகவும், பன்னிரண்டாவது கையில் சக்தியான தேவியையும் காட்டுகின்றார்.

அந்த சிற்பங்கள் மூலம் ஸ்கந்த தத்துவத்தை மேலும் வெளிக் காட்டுகின்றார். வேதங்களைக் குறிக்கும் வகையில் வாகனமான மயிலும், அவரே வேதங்களின் சாரமான ஓம் என்ற பிரணவத்தையும், பிரும்ம வித்தியாவையும் ஞான சக்தியையும் தன் தேவியான சக்தி மூலமும் வெளிக் காட்டுகின்றார். வலப்புறத்தில் உள்ள வள்ளி மூலம் இச்சா சக்தியையும், இடப்புறத்தில் உள்ள தேவசேனை மூலம் கிரியா சக்தியையும் காட்டுகின்றார். வேதங்கள் சப்தங்கள் மூலமே வெளிப் படுவதால் மாயா என்ற உலகை அழகான மயில் மூலமும், நிவுரத்தி என்ற விவேகத்தை சேவல் கொடி மூலமும காட்டுகின்றார். ஆதி சங்கரர் தனது புஜாங்கப்பிராயத என்ற ஸ்தோத்திரத்தில் ஸ்கந்தனை பற்றி கூறுகையில் மகாவேதபாவ்யா ( வேதங்களின் சாரமானவர் ) , என்றும், மஹாவக்ராயகுண்டா ( வேதங்களில் கூறப்பட்டுள்ள உண்மைகள் ) என்றும் கூறினார்.

## தென் இந்தியாவில் ஸ்கந்த பக்தி மார்கங்களும், அவர் புகழும்

இராமாயணம், மகாபாரதம்,மற்றும் பிற புராணங்களிலும் ஸ்கந்தனைப் பற்றிய எழுதப் பட்டுள்ள கதைகள் தென் இந்தியாவில் புகழ் பெற்றவை. ஆனால் அவருடைய லீலைகளைப் பற்றியும், அவருடைய அவதாரம் குறித்தும் கந்த புராணத்தில் உள்ள சங்கர சம்ஹிதாவில் எழுதப்பட்டு உள்ளவைகளே நம்பத் தகுந்தவையாகும். அதை தமிழில் கந்த புராணம் என்ற

பெயரில் பத்தாம் நூற்றாண்டில் வெளியிட்டனர். ஸ்கந்தன் புகழ் பாடும் பாடல்கள் தமிழில் அதிகம் உண்டு. குந்தனின் புகழை கூறும் பாடல்கள் 15 ஆம் நூற்றாண்டில் அருணகிரிநாதராலும், 17 ஆம் நூற்றாண்டில் குமாரகுருபரராலும் எழுதப்பட்டுள்ளன. மேன்மையான எண்ணங்களும் வெளித் தெரியாத உள்ளுணர்வுகளும் உள்ளடங்கிய அருணகிரிநாதர் பாடல்களுக்கு இணையானது வேறு ஒன்றும் இல்லை. ஸ்கந்த முருகனின் மீதான அவருடையப் பாடல்கள் நம்மை ஸ்கந்தனின் உள்ளிருக்கும் ஸ்வருப லக்ஷணா என்ற நிஷ்கலா பரமானந்த வெளி , அதாவது உருவமற்ற பேரானந்த நிலைக்கு அழைத்துச் சென்று விடும்.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என அனைத்துப் பிரிவினரும் அவர் மீது துதிப் பாடல்களைப் பாடியபடி முருகன் ஆலயங்களை நோக்கிப் படை எடுப்பதும், காவடி தூக்கிக் கொண்டு போவதும், கழிகளில் கட்டப் பட்ட குடத்தில் பால், சக்கரை, தேன், பழங்கள், பூ மாலைகள் என பலவற்றையும் கட்டி எடுத்துப் போவதும் தென் நாட்டில் மட்டுமே பார்க்க முடிந்த அற்புதமான காட்சியாகும். ஒருவரது வாழ்க்கையில் உள்ள பிறப்பு இறப்பு போன்றவற்றின் குறைகளைக் அவர் களைந்து விடுகின்றார். குகை போன்ற தங்களுடைய இருதயத்தில் அமர்ந்து கொண்டு, தங்களுக்கு வழி காட்டியாக இருக்கும் முருகனை மாபெரும் சித்தர்கள் அன்புடன் 'குருகுஹா' என அழைக்கின்றனர்.